**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
------
**அசல் வழக்கு எண்.2/2021**

**2026 ஆம்** வருடம் பிப்ரவரி மாதம் 25 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜோசப் ஜான் பிரிட்டோ | ஜாதி | : | |
| த.பெ | : | மரியசூசை | தொழில் | : | விவசாய கூலி வேலை |
| கிராமம் | : | பஞ்சம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57/2026 |
| தேதி | : | 25.02.2026 | | | |

**(உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டது) பி.வா.சா.1 நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்ததால் அவர் இந்த வழக்கில் மீண்டும் அழைத்து விசாரிக்கப்படுகிறார்.)**

**14, 15 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி ஜெர்மன் மற்றும் 9 முதல் 11 பிரதிவாதிகளான உங்கள் குடும்பத்தினரும் இணைந்து வா.சா.ஆ.17 ஆவணமான பஞ்சாயத்து முச்சலிகாவை எழுதிக்கொண்டீர்கள் என்றால் சரிதான், நான் அப்போது சிறு வயதாக இருந்தேன். மேற்சொன்ன பஞ்சாயத்து முச்சலிகாவை நீங்கள் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் 12 மற்றும் 13 வது பிரதிவாதியின் தாயாரான சந்தியாகுஅம்மாளுக்கும், அவரின் தகப்பனாரான இருதயம் சொத்தில் பாகம் இல்லை என்று கூடுதல் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். 12வது பிரதிவாதி மரியபுஷ்பம் அவருடைய தாயார் சந்தியாகுஅம்மாள் இறப்பதற்கு முன்பு பாகம் எதுவும் கேட்கவில்லை என்று எதிர்உரையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த எதிர்உரையில் 12ம் பிரதிவாதியை பற்றி கூறவில்லை என்றால் சரிதான், அவர்கள் பாகம் கேட்கவில்லை அதனால் நாங்கள் சொல்லவில்லை.

பாகம் வேண்டாம் என்பதற்காக தான் 12ம் பிரதிவாதி இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரிதான். நீங்களும், 13 ம் பிரதிவாதி அந்தோணிசகாயராஜும், 12ம் பிரதிவாதி மரியபுஷ்பம் பாகம் கோருவதற்கு உரிமை இல்லை என்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் பாகம் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. 12ம் பிரதிவாதி மரியபுஷ்பம் பாகம் கேட்டு இவ்வழக்கில் எதிர்பாத்திய கோருரிமை கோரியுள்ளார் என்றால் சரிதான். 12ம்

பிரதிவாதி மரியபுஷ்பம் பாகம் கேட்டு எதிர்பாத்திய கோருரிமை கேட்டபிறகு நீங்களோ மற்ற பிரதிவாதிகளோ கூடுதல் எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் உங்களுடைய உங்களுடைய நிரூபண வாக்குமூலத்தில் 12 ம் பிரதிவாதிக்கு பாகம் கிடையாது என்று மட்டும் கூறியுள்ளது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

உங்களுடைய கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் 2ம் வாதியும், 12ம் பிரதிவாதியும் மோசடியாக ஒரு உயில் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த உயில் மோசடியானது என்பதற்கு எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 12ம் பிரதிவாதி மரியபுஷ்பம் 2010 ஆம் ஆண்டிலிருந்து மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார். 15ம் பிரதிவாதி இருதயமேரி B அட்டவணை சொத்தில் 1998 ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

15ம் பிரதிவாதி இருதயமேரி எதிர்வழக்குரையில் தாவா B அட்டவணையில் உள்ள வீட்டில் 1998 ஆண்டிலிருந்து குடியிருந்து வருவதாக 12ம் பிரதிவாதி முதன்முறையாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதால் 12ம் பிரதிவாதி, 15ம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்பட்டதாக நீங்கள் கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்கூறிய சங்கதியை உங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சம்மனசும் வா.சா.ஆ.17 முச்சலிகாவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.17 ன் படி ஏற்கனவே பாகம் பிரித்து விட்டதாகவும், மீண்டும் பாகம் பிரிக்க வேண்டியதில்லை என்று 1ம் பிரதிவாதி சம்மனசு கூறுகிறார் என்றால் சரிதான்.

மரியபுஷ்பமும், அந்தோணிசகாயராஜும் அனுபவத்தில் இல்லை என்று உங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 12 மற்றும் 13 வது பிரதிவாதிகளின் தாயார்களை இவ்வழக்கில் சேர்க்கததால் அவசிய தரப்பினர்களை சேர்க்காததற்காக இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 12 வது பிரதிவாதியின் அம்மாவான சந்தியாகுஅம்மாள் 13வது பிரதிவாதியாக இவ்வழக்கில் அவசிய தரப்பினராக அதனால் தான் சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.165/2B க்கு கட்டுப்பட்ட 80 செண்ட் உங்கள் பாட்டனார் சொத்து என்றால் சரிதான்.

1ம் வாதி ஜெர்மன்அம்மாள் எப்போது இறந்தார் என்றால் 01.04.2012 ல் வேளாங்கண்ணியில் இறந்தார். 15ம் பிரதிவாதி இருதயமேரி வீட்டில் வைத்து தான் ஜெர்மன் அம்மாளை அடக்கம் செய்ததாக உங்களுடைய எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல பொது இடத்தில் வைத்து அடக்கம் செய்தார்கள்.

நீங்கள் உங்களுடைய நிருபண வாக்குமூலத்தில் 15வது பிரதிவாதி வீட்டில் வைத்து தான் ஜெர்மன் அம்மாளை அடக்கம் செய்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

ஜெர்மன் அம்மாள் இறந்தபிறகு வா.சா.ஆ.1 மூலமாக 2ம் வாதி இவ்வழக்கில் சேர்ந்ததற்கு பிறகு இவ்வழக்கில் கூடுதலாக எதிர்வழக்குரை எதுவும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீங்கள் கூடுதலாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் 02.02.2010 தேதியிட்ட உயிலை மோசடியானது என்று நீங்கள் கூறமுடியாது என்றால் சரியல்ல. முச்சலிகாவில் திருத்தி கொடுக்கப்பட்டுள்ள பாகங்கள் முறையே அனுபவித்து கொள்ள வேண்டியது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகத்தின் அடிப்படையில் நீங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் போது குத்தகை உள்ளிட்ட செய்யும் போது உங்களுக்குள் தான் செய்துகொள்ள வேண்டும் என்று முச்சலிகாவில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

23.11.1969 ஆம் தேதி முச்சலிகாவின் பத்திரத்தை சங்கராபுரத்தில் அந்தோணி என்பவரால் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. சங்கராபுரத்தை சேர்ந்தவர் தான் உங்கள் அம்மா என்றால் சரிதான். முச்சலிகா ஆவணத்திலும், உயில் ஆவணத்திலும் ஜெர்மன்அம்மாளின் கையெழுத்து ஒரே மாதிரி தான் உள்ளது என்றால் சரிதான், இனிசியல் மட்டும் தவறாக உள்ளது. முச்சலிகாவில் ஜெர்மன் அம்மாள் சிறுமணியம்மாள் என்று கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு தான் அவர்கள் ஜெர்மன் என்று கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதன்.

ஜெர்மன்அம்மாள் அரசு பணிக்கு செல்வதற்கு முன்பாக Jermine என்று தான் கையொப்பம் செய்தார் என்றும், அரசு பணியில் சேர்ந்த பிறகு Germine என்று கையொப்பம் செய்தார் என்றால் சரிதான். ஜெர்மன்அம்மாள் கணக்கு வைத்திருக்கிற வங்கி கணக்கு புத்தகத்தில் I. Germine என்று தான் உள்ளது என்றால் சரிதான். ஜெர்மன்அம்மாள் 2ஆம் வாதிக்கு எழுதிக்கொடுத்த உயிலில் I. Germine என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor